# சிறுவர்களுக்கு அனுமதி இலவசம்

## மெட்ரோ நிர்வாகம் அறிவிப்பு



சென்னை, ஜன. 10: கொரோனா ஊரடங்கில் அரசு அறிவித்த தளர்வுகளின் அடிப்படையில் மெட்ரோ ரயில் சேவை மீண்டும் தொடங்கப்பட்டது. மேலும், மெட்ரோ ரயிலில் பயணிகள் வருகையை அதிகரிக்க பல்வேறு திட்டங்களை மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிவித்து வருகிறது. அதன்படி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கட்டண தள்ளுபடி, அரசு பொது விடுமுறை தினங்களில் 50 சதவீத கட்டண தள்ளுபடி உள்ளிட்ட சலுகைகளை அறிவித்துள்ளது. இதனால், மெட்ரோ ரயிலில் விடுமுறை தினங்களில் அதிகமானோர் பயணம் செய்து வருகின்றனர்.

இந்தநிலையில், 90 செ.மீ வரை உயரம் உள்ள சிறுவர்களுக்கு மெட்ரோ ரயிலில் பயணம் செய்ய அனுமதி இலவசம் என மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிவித்துள்ளது. தற்போது பள்ளிகள் திறக்கப்படாத சூழலில் ஏழை, எளிய மக்களையும் அவர்களின் குழந்தைகளையும் மெட்ரோ ரயிலில் பயணம் செய்ய வைக்கும் நோக்குடன் இந்த அறிவிப்பு வெளியிடப்படுவதாகவும் மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.